# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8082842

1. District : மதுரை | PS: V & AC | Year: 2023 | FIR No.: 8/23 | Date: 21-9-23
மாவட்டம் | காவல்நிலையம் | ஆண்டு | மு.த.அ. எண் | நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 — Sections பிரிவுகள்: U/S 7 of PC Act 1988
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: as amended by
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: Prevention Of Corruption
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : (Amendment) Act 2018

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 1) 5-9-23 at 9:30 hrs
2) 11-9-23 at 15:30 hrs
Time Period நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை 3) 20-9-23 at 15:45 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21-9-23 — Time நேரம் : 08:15

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவாம் எண் 21-9-23 — Time நேரம் : 09:00

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 6 Km, தென் கிழக்கு

Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி உதவி மின் பொறியாளர் அலுவலகம், வில்லாபுரம், மதுரை.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் B. சந்துரு
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P. ஜெபால்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1984
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் [illegible]
(g) Address : முகவரி 23/25A மணிகண்டன் நகர், வில்லாபுரம், மதுரை-12

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. தெய்வமுருகன், … போர்மேன், உதவி மின்பொறியாளர் அலுவலகம், வில்லாபுரம், மதுரை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

21/9/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
21-09-23 / 09.15 hrs.

Name: பெயர் N. Bharathi Priya
Rank: நிலை Inspector of Police
V4AC, Madurai
21-9-23

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21 3.16(HCL-12)p.2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,**

இன்று 21.09.2023-ஆம் தேதி காலை சுமார் 07.35 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை வில்லாபுரம் மணிகண்டன் நகர் கதவு எண்.23/25A என்ற முகவரியில் வசிக்கும் போஸ் என்பவரது மகன் சந்துரு என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் B. சந்துரு, த/பெ. P.போஸ், 23/25A, மணிகண்டன் நகர், வில்லாபுரம், மதுரை -12. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. அய்யா / அம்மா, நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகின்றேன். நான் மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வருகின்றேன். மதுரை வில்லாபுரம் மணிகண்டன் நகர் சர்வே எண். 15/1-ல் உள்ள ஆயிர வைசியர் காசுக்கார செட்டியார் தர்ம டிரஸ்ட்டி-க்கு சொந்தமான இடத்தில் பிளாட் எண்.136 முதல் 139 வரை உள்ள இடத்தை நான் கடந்த 21.08.2023-ம் தேதி முதல் தரை வாடகைக்கு எடுத்துள்ளேன். எனவே அந்த இடம் மதுரை ஆயிர வைசியர் காசுக்கார செட்டியார் மேனேஜிங் டிரஸ்ட்டி என்ற பெயரில் உள்ளது. அதில் ஏற்கனவே இருந்த தகரத்தால் ஆன செட்டில் கிரில் ஒர்க்ஸ் ஷாப்புக்கு மாத வாடகைக்கு விட்டுள்ளேன். அதற்கு புதிய மின் இணைப்பு வேண்டி கடந்த 02.09.2023-ம் தேதியன்று, வில்லாபுரம் உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தேன். அதற்கான விண்ணப்ப எண்.2000 5066 0923 1323 ஆகும். உடனே, அந்த விண்ணப்ப படிவத்துடன் எனது இடத்திற்கான வாடகை ஒப்பந்த பத்திரம், என்னுடைய ஆதார்கார்டு, அட்வான்ஸ் தொகை செலுத்தியதற்கான ரசீது ஆகியவற்றை இணைத்து வில்லாபுரம் மின் வாரிய அலுவலகத்திற்கு நேரில் சென்று, உதவி மின் பொறியாளரிடம் கொடுத்தேன். அவர் அதனை பெற்று கொண்டு, நாளை உங்கள் இடத்தை பார்வையிட வருகின்றேன். எங்கள் அலுவலக ஃபோர்மேன் வேல்முருகன் போன் நம்பரை வாங்கி கொண்டு அவரிடம் மற்ற விபரங்களை கேட்டு தெரிந்து கொள்ளுங்கள் என்று கூறி அருகில் இருந்த நபரிடம், வேல்முருகன் போன் நம்பரை கொடுக்க சொன்னார். அவர் ஃபோர்மேன் வேல்முருகனின் செல்போன் எண். 95854 24499 என்ற எண்ணை கொடுத்தார். மறுநாள் 03.09.2023-ம் தேதி காலை 09.30 மணியளவில் வில்லாபுரம் உதவி மின் பொறியாளரும், ஃபோர்மேன் வேல்முருகன் என்பவரும் என் இடத்திற்கு நேரில் வந்து பார்வையிட்ட பின்னர், உங்கள் இடம் மின் கம்பத்திலிருந்து 100 அடி தூரத்திற்கு மேல் இருப்பதால் அரசு செலவில் மெயின்

ரோட்டில் ஒரு மின் கம்பம் ஊன்றி, புதிய மின் இணைப்பு கொடுக்க வேண்டும். அதற்கு முன்னர் நீங்கள் நாளைக்கு உரிய அரசுகட்டணத்தை செலுத்திவிட்டால் உடனே மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்துவிடலாம் என்று கூறி சென்றார்கள். மறுநாள் 04.09.2023-ம் தேதியன்று எனது செல்போன் எண்.75026 10000 என்ற மொபைல் எண்ணிற்கு வந்த குறுஞ் செய்தியின் படி மதியம் ரூ.7,957/-யை ஆன்லைன் மூலம் செலுத்தினேன். மறுநாள், 05.09.2023-ம் தேதியன்று காலை சுமார் 09.30 மணியளவில், நான் மாவட்ட நீதிமன்றம் செல்லும் போது, வில்லாபுரம் ராஜா பர்னிச்சர் கடைக்கு எதிர்புறம் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள மாநகராட்சி பூங்கா அருகில் ஃபோர்மேன் திரு. வேல்முருகனை சந்தித்த போது, நான் பணம் கட்டிய விபரத்தை அவரிடம் கூறினேன். அவர் அதனை தனது வாட்ஸ் அப் எண்ணுக்கு அனுப்பச்சொன்னார். மேலும், நான் அவரிடம் எப்போது புதிய மின் இணைப்பு கிடைக்கும் என கேட்டதற்கு, ரூ.15,000/- கொடுத்தால் உங்களுக்கு உடனே இணைப்பு கிடைக்க ஏற்பாடு செய்கின்றேன் என்று கூறினார். நான் அவரிடம் ஏற்கனவே நேற்று ஆன்லைன் மூலம் பணம் செலுத்திவிட்டேன். இனி எதற்கு பணம் என்று கேட்டேன். அதற்கு, அவர் உங்களுக்கு தெரியாதது இல்லை. பணம் கொடுக்காவிட்டால் உங்கள் விண்ணப்பம் அப்படியேதான் இருக்கும். எனவே பணம் ரூ.15,000/- கொடுத்து வேலையை வேகமாக முடித்து கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் அவரிடம் வழக்கறிஞரான என்னிடமே பணம் கேட்கிறீர்களே என்று கேட்டதற்கு, அவர் அதற்கு மேல் உங்கள் விருப்பம். யாராக இருந்தாலும், பணம் கொடுத்தால்தான் வேலை முடியும் என கண்டிப்பாக சொல்லிவிட்டார். ஆனால், நான் பணம் கொடுக்காமல் காத்திருந்தேன். இதற்கிடையில், கடந்த 11.09.2023-ம் தேதியன்று மதியம் சுமார் 03.30 மணியளவில், ஃபோர்மேன் வேல்முருகன் அவரது செல்போனிலிருந்து என்னை தொடர்பு கொண்டு, உங்கள் இடத்தை பார்வையிட ADE உடன் நானும் வந்துள்ளேன். உங்கள் இடத்தில் உள்ள கிரில் கம்பெனியை புகைப்படம் எடுத்து எனது வாட்ஸ் அப்-க்கு அனுப்புங்கள் என்று சொல்லிவிட்டு, நான் கேட்ட பணம் ரூ.15,000/- என்னாச்சு என்று கேட்டார். நான் அவரிடம் வண்டியில் வந்து கொண்டு இருக்கிறேன். வீட்டிற்கு வந்த பின்னர் பேசுகிறேன் என்று கூறி போனை கட்பண்ணி விட்டேன். வீட்டிற்கு வந்த பின்னர், அவர் சொன்னபடியே எனது தகர செட்டை புகைப்படம் எடுத்து வேல்முருகனின் வாட்ஸ் அப் எண்ணிற்கு அன்றைய தினம் மதியம் 03.50 மணிக்கு அனுப்பிவைத்தேன். ஆனால், பணம் கட்டி இரண்டு வாரம் ஆன பின்னரும், எனக்கு புதிய மின் இணைப்பு கொடுக்காத

காரணத்தால், நேற்று 20.09.2023-ம் தேதி மதியம் சுமார் 03.45 மணியளவில், நான் வில்லாபுரம் உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு நேரில் சென்று, ஃபோர்மேன் திரு. வேல்முருகனை சந்தித்து, எனது இடத்திற்கான புதிய மின் இணைப்பு குறித்து கேட்ட போது, அவர் என்னிடம் நான் கேட்ட பணம் ரூ.15,000/- என்னாச்சு ? அதை கொடுத்தால்தான் நான் உங்களுக்கு புதிய மின் இணைப்பு கிடைக்க ஏற்பாடு செய்வேன். இல்லை என்றால் நீங்கள் சும்மா அலைந்து கொண்டிருக்க வேண்டும் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். அவர் கேட்ட லஞ்சப்பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. இத்துடன் (1) நான் ரூ.7,957/- பணம் செலுத்திய ரசீது எண்.PRCIC 121037013, (2) எனது பெயரில் உள்ள UDYAM பதிவு சான்று எண். TN-12-0033339, (3) 01.09.2023-தேதியிட்ட தரை வாடகை ஒப்பந்த பத்திரம், (4) அட்வான்ஸ் தொகை செலுத்தியதற்கான இரசீது எண்.698 நாள் : 21.08.2023, மற்றும் (5) மின் இணைப்பு வழங்க மேனேஜிங் டிரஸ்ட்டி அளித்த சம்மத கடிதம் நாள் : 31.08.2023 ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும், ஃபோர்மேன் வேல்முருகன் கேட்ட லஞ்சப்பணம் ரூ.15,000/- கொண்டு வந்துள்ளேன். எனவே எனது இடத்திற்கு புதிய மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்ததற்கு என்னிடம் ரூ.15,000/- லஞ்சம் கேட்கும் வில்லாபுரம் உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் ஃபோர்மேனாக பணியாற்றும் திரு.வேல்முருகன் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, (ஒ-ம்) XXXXXX (B. சந்துரு) 21/9/2023.

**Sir, Received the typed complaint on 21.09.2023 at 07.35 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 08/2023 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.15 hrs and took up investigation. Sd./-XXXX (N.Bharathipriya) 21.09.2023 Inspector of Police, V&AC, Madurai.**

**Original FIR along with original typed complaint of Tr. B. Chandru, S/o. P. Bose, 23/25A, Manikandan Nagar, Villapuram, Madurai - 12 along with Xerox**

copies of 1) Cash Receipt No. PRCIC 121037013 for Rs.7,957/-, 2) UDYAM Registration Certificate No. TN-12-0033339 in the name of Chandru, 3) Rental Agreement Dated : 01.09.2023, 4) Advance Payment Receipt No.698 Dated : 21.08.2023 and 5) Consent Letter of Managing Trustee Dated : 31.08.2023 for new EB connection are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

21-9-23

(N. Bharathipriya)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.